RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20314

# நெல்லை நூல்கள் சுட்டும் நிலபகுப்பு

**த. சேர்மக்கனி** [அ,*]

[அ] சென்னை பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெம்மேலி,காஞ்சிபுரம்- 603104, தமிழ்நாடு, இந்தியா.

# Category of Lands described in Nellai texts

**T. Chairmakkani** [a, *]

[a] University of Madras Arts and Science College, Nemmeli, Kanchipuram-603104, Tamil Nadu, India.

Corresponding Author: deepaarun2692012@gmail.com

Received : 06-02-2020
Accepted : 30-05-2020

Check for updates

**ABSTRACT**

The article is a survey of the land and the messages that the Nellai district grammar books have realized. This article also clarifies the division of the land into five Ilakani's whereas the Nellai Texts divided them into ten. These grammar books differ from tradition in the way of grammar but with the acceptance of Conventional. The article also describes variations in the meaning of grammar.

**Keywords:** Nellai, Books, Lands, Nellai Texts

## ஆசிரியர் குறிப்பு

**த. சேர்மக்கனி** பள்ளிப் படிப்பினை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைத்தியலிங்க சுவாமி உயர்நிலைப்பள்ளி மற்றும் மேற்கு திருநெல்வேலி மேல்நிலைப் பள்ளியில் முடித்தேன். இளங்கலைப்பட்டம் (2000) திருநெல்வேலி இராணி அண்ணா அரசு மகளிர் பெண்கள் கல்லூரியிலும், முதுகலைத்தமிழ் மற்றும் இளமுனைவர் ஆகிய பட்டங்களை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும் பயின்றேன். அதே பல்கலையில் முனைவர் சு.அழகேசன் அவர்களின் நெறிக்காட்டுதலின் கீழ் “திருநெல்வேலி மாவட்ட இலக்கணநூற்கள்” என்னும் தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றேன். யு.ஜி.சி நடத்திய தேசிய தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளேன். ஆய்வுக் கட்டுரைகளை பல பல்கலைக் கழகக் கருத்தரங்கில் வாசித்துள்ளேன். தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளேன். முதுகலைத் தமிழில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளேன்.

## ஆய்வுச்சுருக்கம்

நெல்லை மாவட்ட இலக்கண நூற்கள் உணர்த்தும் நிலம் மற்றும் அது குறித்த செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. நிலத்தை இலக்கணிகள் ஐந்தாகப் பகுக்க நெல்லை நூற்கள் பத்து என பிரித்துப் பேசுவதையும் இக்கட்டுரை தெளிவுருத்தும். இவ் இலக்கண நூற்கள் மரபிலிருந்து மாறுபட்டுப் புதுமையாக இலக்கணம் வகுக்கும் பாங்கினையும், அதேசமயம் மரபினை ஏற்றுக் கொண்டமையினையும் பொருள், இலக்கணம் உணர்த்துவதில் ஏற்பட்ட மாறுபாடுகள் போன்றவற்றையும் இக்கட்டுரை விளக்கி நிற்கிறது.

## மக்களின் வாழ்விடம்

அகவாழ்விலும் புறவாழ்விலும் சிறப்புற்று செம்மாந்து வாழ்ந்த பண்டைத் தமிழரின் வாழ்வானது,

1.குறிஞ்சி, 2.முல்லை, 3.மருதம், 4.நெய்தல், 5.பாலை

என்ற ஐந்து நிலங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தனைத் தொல் முதலான இலக்கண நூற்கள் சுட்டுகின்றன.

“குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தல் ஐந்திணைக் கெய்திய பெயரே” (அ.வி.,நூ.6)

“கருதிய குறிஞ்சி பாலை, முல்லை
மருத நெய்தல் வகுத்தவைந் திணைப்பெயர்” (மா.அ.,நூ.7)

“திணைகுறிஞ்சி, பாலை, முல்லை, மருத(ம்), நெய்தல், ஐந்தாம்.”

இவ்வைந்து திணைகளுள்ளும்,

1.முதற் பொருள், 2. கருப் பொருள், 3. உரிப் பொருள்

என்ற மூன்றும் கூறப்படுவதாகும். “அவைதாம்

முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் எனமுறை
நுதற்பொருண் மூன்றினும் நுவலப்படுமே” (அ.வி.,நூ.7)

“அவைதாம்
முதல்கரு வுரியெனு முறைப்பொ ருளன” (மா.அ.,நூ.8)

செறியு(ம்) முதற்கரு, உரி என்றவை மூன்று பொருளாந்...”(சு.நா.,நூ.72)

## முதற்பொருள்

முதற் பொருளாகக் கருதப்படுவது நிலமும், பொழுதும் ஆகும்.

“நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே” (அ.வி.,நூ.8)

“அவற்றுள்ளும் முதனிலம் பொழுதன மொழியிரு வகைத்தே” (மா.அ.,நூ.9)

துணைநிலமும்,பொழுது(ம்)முதற்பொருளாகும்....”(சு.நா.,நூ.72)

## நிலம்

முதற் பொருளில் ஒன்றாகிய நிலத்தினை 10 வகையாகப் பிரிக்கின்றனர் நெல்லை மாவட்ட இலக்கணிகள். அவையாவன,

1.மலையும், மலையைச் சார்ந்த இடமும் - 2
2.மணலும் மணல் சார்ந்த இடமும் - 2
3.காடும், காடு சார்ந்த இடமும் - 2
4.வயலும், வயலைச் சார்ந்த இடமும் - 2
5.கடலும் கடலைச் சார்ந்த இடமும் - 2
மொத்தம் - 10

“வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தரு மிடனே
எனவீ ரைவகைத் தனையியல் நிலமே” (அ.வி.,நூ.9)

“மலைசுரவம் புறவம் வயல்கட லவைசார்
நிலைபெறு மிடங்களி னிலனா மீரைந்தே” (மா.அ.,நூ.10)

“ ........................................................ வரையே
சுரம், காடு,வயல்,திரைசேர் இடம்பத்து நிலமாம்” (சு.நா.,நூ.72)

மக்களது வாழ்வின் ஆதாரமாக விளங்கக் கூடியது நிலம். இதனை அடிப்படையாகக் கொண்டே அக்காலத்தைய போர்கள் நிகழ்ந்துள்ளமையினை இலக்கணிகள் பதிவு செய்துள்ளனர். இலக்கணிகளிடையே “நானிலக் கொள்கை” இருந்தனை,

“அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவனது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே” (தொல்.,நூ.940)

என்ற நூற்பா புலப்படுத்துகின்றது. மேலும் நிலத்தினை வரையறுக்கும் தொல்காப்பியர்,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (தொல்.,நூ.951)

என பாலை நிலத்தினை விடுத்து முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு நிலத்தை மட்டும் வரையறுக்கிறார். “இயற்கை நெறிக் காலத்திலேயே, தமிழ்நாட்டுப் பாலைநிலம் மக்கள் குடியிருந்து வாழ முடியாத நிலமாக மாறி வந்திருத்தல் வேண்டும். இதனால் அக்கால மக்கள் குடியிருந்து வாழ்ந்த நிலங்களைக் குறிக்கும் போது பாலையை நீக்கி ஏனைய நான்கு நிலங்களையும் நானிலம் என வழங்கும் வழக்காறும் காணப்பட்டது.” (Subramaniyan, 2006)

ஆயின் பாலை என்பதனை தொல் முதலான இலக்கணிகள் நிலமாக ஏற்காமல் இல்லை. பாலை நிலத்திற்கென

- பொழுதுகள்
- உரிப்பொருள்

ஆகியனவற்றைச் சுட்டுவதன் மூலம் இதனை அறியலாம். இதனை,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" (தொல்.,நூ.955)
"பின்பனி தானும் உரித்தென மொழிப" (தொல்.,நூ.956)

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலை திணைக்குரிப் பொருளே" (தொல்.,நூ.960)

என்ற நூற்பா வழி அறியலாம்.

இதன்படி, பாலை நிலப் பொழுதுகளாவன;

- பெரும் பொழுது - இளவேனில், முதுவேனில், பின்பனி.
- சிறுபொழுது - நண்பகல்.

என்பதனோடு "பிரிதல்" என பாலை நில ஒழுக்கமும் சுட்டப்பட்டுள்ளது. பாலைக்கெனத் தனி நிலம் இல்லை. அது மக்கள் வாழத் தகுதியற்ற வறண்டு, வெப்பம் மிகுந்து துன்பம் தரக்கூடியப் பகுதியாகும். பாலை நிலம் எவ்வாறு உருவானது என்பதனை,

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப்.,காடு.64 - 66)

என்ற சிலப்பதிகார வரிகளின் மூலம் அறியலாம்.

பாலை நிலத்தில் மக்கள் வாழ்வானது நிலையானதன்று. இப்பகுதியை மக்கள் வழிப்போக்கிற்காக பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு வருபவர்களிடமிருந்து கள்வர்கள் பொருட்களை பறித்துக் கொள்ளும் அளவுக்குக் கொடுமை நிறைந்தது. இதனை,

"வலியமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்கும் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொ ரர்ந்துயிர் வெளவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை" (கலி.,4)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

பாலை என்பதற்கு "தமிழ் நாட்டில் நிலத்தாற் பாலை இலதேனும், காலத்தாற் பாலையுண்டு. நிலையான சுரம் இன்றேனும், வந்துபோம் சுரம் உண்டு. கோடை என்னும் காலப்பாலை குறிஞ்சி முல்லைப் பகுதிகளை ஓரிரு திங்கள் நீரற்ற களமாக, வெப்பம் வீசும் சுரமாக, யாதுந் தோன்றாப் பாலைநிலமாக, கடுங்கதிர் ஞாயிற்றின் விருந்தில்லாக மாற்றிவிடுகின்றது. இஃது உண்மைப் பாலையன்று; பாலைப்போலி என்று நிலவியற்கை தெளிந்த இளங்கோ "பாலை என்பதோர் படிவங் கொள்ளும்" என்றார். ஒருகாலச் செயற்கைத் தோற்றம் உடைய அவ்வளவே என்று சுட்டினார். கோட்டை நீங்கிக் கார் பொழியுங்காலை,

இச் செயற்கைப்பாலை ஒழிந்துபோம்” (வ.சு.ப.மாணிக்கம்,2007;150) என விளக்கமளிக்கின்றார் (Subramaniyan, 2007).

## நெல்லை நூற்கள் சுட்டும் நிலப்பகுப்பு

ஆயின் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த இலக்கண நூற்கள் ‘ஐவகை’ நிலம் என்ற கொள்கையினை ஏற்றுக்கொள்கின்றன.

“கருதிய குறிஞ்சி, பாலை, முல்லை
மருத நெய்தல் வகுத்தவைந் திணைப்பொ;” (மா.அ.,நூ.7)

“திணை குறிஞ்சி, பாலை, முல்லை, மருத(ம்), நெய்தல்
ஐந்தாம் ......” (சு.நா.,நூ.72)

“புறப்பொருட் பகுதியில் பொருவில் ஐவகை
நிலத்துஇயல்பு உரைக்குதும் நிகழ்ந்த வாறே” (அ.இ.,பொ.நூ. 72)

## போர்கள்

போர்கள் பெரும்பாலும் பொருள் சார்ந்தோ, மண் நடைபெற்றுள்ளன. அகத்திணைக்குப் புறனாக அமைந்தனால் இவை புறத்திணைகளாகும்.

“அவைதாம்,
குறிஞ்சி முதலிய வாகுபெய ரகத்திணைக்குப்
புறத்திணை யவ்வவ் நிலத்து மக்களவ்
வகையாற் பிறந்த செயற்கை வேற்றுமையா
னொன்றற் கின்றிய மையா வாயிற்று” (மா.அ.,நூ.317)

## புறத்திணைகள்

அகத்தைப் போன்று புறத்திணைகளும் ஏழு வகைப்படும். அவையாவன;

1.வெட்சி, 2. வஞ்சி, 3. உழிஞை, 4. தும்பை, 5. வாகை, 6. காஞ்சி, 7. பாடாண்.

“வெட்சி, வஞ்சி யுழிஞை, தும்பை
வாகை, காஞ்சி, பா டாண் ணெனவரும்” (மா.அ.,நூ.318)

“..........வெட்சி, வஞ்சி, உழிஞை
திகந்ததும் பை, வாகை ஐந்துகாஞ்சியேபா டாண்
டிணை இரண்டுந் தொகுத்துஏழும் புறப்பொருளாம்...” (சு.நா.,நூ.1291)

## அகத்திற்குப் புறனான திணைகள்

அகத்தைப் போன்று புறத்திற்கும் திணைகள் ஏழு வகைப்படும். அவை அட்டவணை 1- ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1. திணை வகைகள்**

| அகத்திணை | புறத்திணை |
|---|---|
| குறிஞ்சி | வெட்சி |
| முல்லை | வஞ்சி |
| மருதம் | உழிஞை |
| நெய்தல் | தும்பை |
| பாலை | வாகை |
| பெருந்திணை | காஞ்சி |
| கைக்கிளை | பாடாண் |

நெல்லை நூற்களுள் மாறன் அலங்காரம் அகத்திற்குப் புறனான திணைகளை மட்டும் சுட்டிச் செல்கின்றது.

"அவற்றுள்
மேதகு குறிஞ்சிப் புறனாம் வெட்சி" (மா.அ.,நூ.319)
முல்லைப் புறமென மொழிபவங் சியதே" (மா.அ.,நூ.320)
"உறுபுனன் மருதப் புறனாம் உழிஞை" (மா.அ.,நூ.321)
"தொடுகட னெய்தற் புறனாம் தும்பை" (மா.அ.,நூ.322)
"வன்பாற் பாலைப் புறனாம் வாகை" (மா.அ.,நூ.323)
"கருதிய பெருந்திணைப் புறனாங் காஞ்சி" (மா.அ.,நூ.324)
"பழிப்பில் கைக்கிளைப் புறன்பா ரர்ண் பகுதி" (மா.அ.,நூ.325)

இவற்றுள்,

1.வெட்சி, 2.வஞ்சி, 3.உழிஞை, 4.தும்பை, 5.வாகை

என்ற ஐந்திணைகளையும் புறத்திணைகளாகவும்,

1.காஞ்சி, 2.பாடாண்

ஆகிய இருதிணைகளையும், இவற்றோடு கரந்தையையும் சேர்த்து "புறப்புறத்திணை" களாகவும் மாறன் அகப்பொருள் பிரிக்கின்றது

"அவற்றுள்ளும்
முந்துறை யைந்தும் புறமென மொழிப" (மா.அ.,நூ.326)
"பொற்புடை வாகை பா டாண் புறப்புறங்
கரத்தை யெவ்வழியினுங் கரந்துறை காட்சிய" (மா.அ.,நூ.327)

ஆயின் சுவாமிநாதம் இதனிலிருந்து விரிந்த அளவில் புறத்திணைகள் குறித்துப் பேசுகின்றது.

## குறிஞ்சி

மலையும் அதனை சார்ந்த பகுதியுமான குறிஞ்சி நிலத்தில் நடைபெறும் போரானது,

- ஆநிரைகளைக் கவர்ந்து வருவது
- கவர்ந்து வந்த ஆநிரைகளை மாற்றான் மீட்பது (கரந்தை)

என்ற இரு நிலைகளில் நடைபெறும் வெட்சி என்பதற்கு, "அரசனால் ஏவப்பெற்ற, நாட்டின் முனையிலுள்ள ஊரார், அயல்நாட்டின் கண் உள்ள பசுக்கூட்டத்தைக் கவர்ந்து கொணர்ந்து பாதுகாத்தலைச் செய்வதாகும்" என விளக்கமளிப்பதனை,

"வேந்து விடுமுனைஞர் வேற்றுபுலக்களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்" (தொல்.,நூ.1003)

என்ற நூற்பா வழி அறியலாம்.

வெட்சித் திணையில் நடைபெறும் நிகழ்வுகளை சுவாமிநாதம் கீழ்க்கண்டவாறு சுட்டுகின்றது.

1. பசுக்களைக் கைப்பற்றிக் கொண்டு வந்து பாதுகாத்தல்.
2. அரசன் தன் பகைவருடைய பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வரும்படி வீரர்களுக்குச் சொல்லுதல்.
3. அவ்வீரர்கள் மகிழ்ச்சியுடன் அரசனது கட்டளையை ஏற்றுக் கொள்ளுதல்.
4. படை செல்லும் ஒலி கேட்டல்.
5. நல்ல நிமித்தம் உணர்கிறதா என்று ஆராய்தல்.
6. அந்நிமித்தம் பற்றிக் கவலைப்படாத வீரர்கள் மேலும் தொடர்ந்து செல்லுதல்.

"மிகுங்குறிஞ்சிப் புறம்வெட்சி, அதில்ஆதந் தோம்பல்
வேந்தன்வய வரைமருவார் நிரைகவர்கொன் றுரைத்தல்,
உகந்துபணி தலைக்கோடல், படைஅரவம், விரிச்சி
ஓர்தல் வேண் ரர்வீர மறவர்வழிச் செலவே" (சு.நா.,நூ.129)

இவை மட்டுமின்றி,

1. ஒற்றன் (பகை நாட்டின் நிலைமை) கூறுதல்.
2. பகை அரசன் நாட்டுப்புறத்துச் சென்று தங்குதல்.
3. ஊரை அழித்தல்.
4. பசுக்களை கவர்ந்து கொள்ளுதல்.
5. பகைவருடைய போரை விலக்குதல் (போர் முடிந்து போதல்).
6. பசுக்களுக்குத் துன்பம் நேராதபடி கொண்டு போதல்.
7. வீரர்களுடைய வழிவந்தோர் (உறவினர்) மகிழ்தல்.
8. பசுக்கூட்டங்களை ஊரில் கொண்டுவந்து நிறைத்தல்.
9. பசு நிரையைப் பங்கிட்டுக் கொள்ளுதல்.
10. வீரர்கள் மதுவை உண்டு மனங்களித்து ஆடுதல்.
11. வேண்டியவர்களுக்குப் பசுக்களைக் கொடுத்தல்.
12. பகைவர் நாட்டின் நிலைமையைக் கூறினவர்க்கு (அரசன்) சிறப்புச் செய்தல்.
13. புள் நிமித்தம் சொன்னவர்க்குப் பரிசு வழங்குதல்.
14. துடிகொட்டினவனின் பண்பைக் கூறுதல்.
15. வெற்றியைத் தந்த கொற்றவை என்ற தெய்வத்தின் சிறப்பு கூறுதல்.
16. பூசை செய்கிறவனோடு கூத்து ஆடுதல்.

என்பனவும் வெட்சியுள் அடங்கும்.

“வேயுரை, வேயப் புறத்துஇறை, ஊர் கொலையாகோள், பூசல்
விலக்குஇ டர் இன்று உய்த்தல் நுவல் வழித்தோற்ற நிறைத்தல்
ஆய்நிரைப்பா தீடுஉண் டாட்டு, ஈகை, புலனே
அறிசிறப்புப், புள்வழக்குத், துடிநிலைகொற் றவைசீர்
காயும்வெறி யாட்டுஇருபத் திரண் ரர்ம்ஆன் மீட்சி
கரந்தைநிரை கோள்கேட் டாள் மறவரைமீட் கென்றல்,
சேயபடை யொலிபறவாப் புட்டொpதல், நடையிற்
செல்லு,சாப் புறத்துஇறை, போர் புண்ணோடுவந் திடலே” (சு.நா.,நூ.130)

## வஞ்சித் திணை

காடும் அதைச் சார்ந்த பகுதிகளுமான முல்லைத் திணைக்குப் புறனாக அமைவது வஞ்சித் திணையாகும். இது “பகைவர் நாட்டின் மீது போர் தொடுத்து வெற்றி பெறக் கருதும் திணை” ஆகும். வஞ்சி என்பதற்கு “குறையாத மண்ணை விரும்பிய அரசனை, எதிர் அரசன், அவனை அஞ்சப் பண்ணி மேற்சென்று போர் செய்தலைக் குறிக்கும்” என இலக்கணம் வகுத்திருப்பதனை,

“எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே” (தொல்.,நூ.1008)

என்ற நூற்பா வழி அறியலாம். வஞ்சித்திணையில்,

1. அரசன் வஞ்சிப்பூவைச் சூடிக் கொள்வது.
2. படைகள் எழுச்சியினால் ஏற்படும் அரவம்.
3. அரசன் குடையைப் புறவீடு விடுதல்.
4. அரசன் படையெடுத்துச் செல்லும் நாள் குறிப்பிடுதல்.
5. கொற்றவை நிலை.
6. கொல்லர் போர்க்கருவிகளைச் செய்யும் தொழிலைக் கூறுதல்.
7. அரசனைப்புகழ்ந்து அவனது தன்மையைக் கூறுதல்.
8. பகைவர்கள் அழிக்கும் அரசனைப் புகழ்ந்து பகைவர் நாடு அழிவதற்கு வருந்துகின்ற கொற்றவள்ளை.
9. போரிடுகின்ற வீரர்க்கு அருள் செய்கின்ற பேராண் வஞ்சி.
10. தோற்ற அரசனிடம் திறையைப்பெற்ற அரசன் அந்நாட்டை விட்டு நீங்குவது.
11. பரிசுபெற்றோர் அரசனுடைய வள்ளல் தன்மையைச் சொல்லும் வீரர்களின் நிலை (மாராய நிலை).
12. பகைவர் தன்சேனையை நெருங்கித் தன்னுடைய ஆண்மைத் தன்மை உயர்த்திச் சொல்லும் நெடுமொழி.
13. தன்னுடைய குடியின் சிறப்பினைச் சொல்லும் முதுமொழி வஞ்சி.
14. பகைவர் ஊர்களை எரித்த புல வஞ்சி (உழி புல வஞ்சி).
15. பகைவர் ஊர்களைக் கொள்ளையடித்த வஞ்சி (மழபுல வஞ்சி).

16. பாணர்க்குப் பரிசில் கொடுத்தல் (கொடை வஞ்சி).
17. வென்ற அரசனுக்குத் திறையைக் கொடுத்துக் குடிமக்களைப் பாதுகாத்த குறுவஞ்சி.
18. வீரர்களுக்குக் கட்டப்பட்ட பாசறையின் கூறுபாட்டைக் கூறுதல்.
19. ஒரு வீரனின் தனிச்சிறப்பு நிலையைக் கூறுதல் (தனி நிலை).
20. வீரன் தோற்று ஓடுபவரின் முதுகுப் புறத்து வாள் எறியாத தன்மையைக் கூறுதல் (தழிஞ்சி).
21. பகைவர்கள் பணிந்த பின்னும் படையெடுத்து வந்த மன்னவன் தன் நாட்டுக்குச் செல்லாமல் பாசறையில் தங்கியிருத்தல் (பாசறை வஞ்சி).
22. பகைவர்களின் நாட்டை எரித்த பெருவஞ்சி.
23. சோறு உதவல் (பெருஞ்சோற்று வஞ்சி).
24. அரசனுடைய வெற்றிப் புகழ் கூறும் இசை வஞ்சி.
25. பகையரசனின் நாடு அழிந்ததற்கு இரங்குதல்.

என 25 துறைகளைக் (சு.நா.,நூற்.132,133) குறிப்பிடுகிறது.

முல்லையது புறவேஞ்சி, பகைமேற்சென்று அடலா(ம்);
முதல்வன்வஞ்சி ஆடல்படை யொலி,குடை நாட்கோளே,
செல்லுமவர் நாட்கோள்கொற் றவைநிலை,வேலுழவர்
செய்தொழில்கூ றுதல், இறையை வழுத்துகொற்ற வஞ்சி
கொல்லிறையைப் புகழ்ந்துபிற நாடுஅழிபுக்குஇரங்கு
கொற்றவள்ளை, பொருவீரர்க்கு அருள்பேராண் வஞ்சி
வல்லதிறை வாங்கிஇறை பெயர்ந்தபக்கம், வேந்தின்
வரிசைபெற்றோர் வண்மைசொன்மா ராயவஞ்சிப் பகுப்பே” (சு.நா.,நூ.132)

## உழிஞைத் திணை

உழிஞைத் திணையாவது, கோட்டையை முற்றுகை இடுதல் மற்றும் அதனைக் கைப்பற்றுதல் என்ற இருநிலைகளில் அமையும் என்பதினை,

“முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்றாகும் என்ப” (தொல்.,நூ.1011)

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம். தொல்காப்பியர்,

1. தன்னை ஏற்றுக் கொள்ளாதார் தேயத்தை வெற்றி பெறக் குறித்த கொற்றமும்.
2. நினைத்ததை முடிக்கும் அரசனது சிறப்பும்.
3. பழைமையான கோட்டையைக் கவரும் விருப்பமும்.
4. தோலாகிய கிடுகுப் படையின் பெருக்கமும் .
5. அரணுள் இருப்போன் செல்வமும்.
6. புறத்திலிருக்கும் அரசன் வருந்திய வருத்தமும்.
7. ஒருவனாகி நின்று எதிர்த்த குற்றுழிஞையும்.
8. எதிர்த்தோரின் பகையைப் பேணாத அரிய கோட்டைப் போர்.

என்று எட்டு வகையாகக் குறிப்பிடுகின்றார்.

"கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்,
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்,
தொல்எயிற்று இவர்தலும், தோலது பெருக்கமும்,
அகத்தோன் செல்வமும், அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும், திறப்பட
ஒருதான் மண்டிய குறுமையும், உடன்றோர்
வருபகை பேணார் ஆர்எயில் உளப்படச்
சொல்லப்பட்ட நாலிருவகைத்தே" (தொல்.,நூ.1013)

இது பன்னிரண்டு துறைகளை உடையது என்பதனை தொல்காப்பியம் மூலம் அறியலாம் (நூ.1014). சுவாமிநாதம் தொல்காப்பியரின் கருத்துக்களினை ஏற்றுக் கொண்டாலும், அதிலிருந்து சற்று விரிந்த நிலையில் இலக்கணம் இயம்புகின்றது.

மருதம் என்ற அகத்திணைக்குப் புறனான உழிஞை என்னும் புறத்திணை,

1. படையெடுத்துச் செல்லும் அரசன் கோட்டையை முற்றுகையிடுதல்.
2. அரணை உள் இருக்கும் அரசன் காத்தல்.

1. என இரு வகைப்படும். மேலும் உழிஞைப் போரானது,

1. அரணை முற்றுகையிடுதல்.
2. உழிஞை மாலை அணிந்து கொள்ளுதல்.
3. அரசன் குடையைப் புறவீடு விடுதல்.
4. வாளைப் புறவீடு விடுதல்.
5. முரசின் நிலைமையைக் கூறுதல்.
6. பகைவர் நாட்டு மதிலைக் கைப்பற்ற அரசன் வீரரோடு செல்லும் கொற்ற வள்ளை.
7. மன எழுச்சியுடன் அரசன் வருதலால் அரண் கைப்பற்றப்படும் என்றல் (அரச உழிஞை).
8. வீரத்தோடு போரிட்டு அரணைக் கைப்பற்றும் தன்னுடைய அரசனைத் திருமால் என்று புகழ்ந்து சொல்லும் கந்தழி.
9. உழிஞை மாலையணிந்த புகழுடைய சிவபெருமானின் புகழ்கூறும் முற்றுழிஞை.
10. எல்லோரும் காந்தள் பூ விரும்புதலைச் சொல்லுதல்.
11. மதிற்புறத்து இருத்தல்.
12. மதிலை கைப்பற்றியதைச் சொல்லுதல்.
13. அரசன் சிறந்த வீரர்களின் கொள்கைளைப் புகழ்ந்து உரைத்தல்.
14. பகைவர் மதில்மேல் வீரன் ஒருவன் மட்டுமே போரிட்ட குற்றுழிஞை.
15. காவற்காட்டைக் கடந்து முன்னே செல்லுதல்.
16. காவற் காட்டைப் பகைவர்கள் காத்தல்.
17. அகழியின் புறத்துத் தங்குதல்.
18. அகழியிடத்துப் போரிடுதல்.
19. மதிலில் ஏணியைச் சாத்துதல்.
20. அரணத்தின் வலி அழியும்படி ஏணிமேல் ஏறிச்செல்லுதல்.

21. மதில்மேல் பாய்ந்து செல்லுதல் (முது உழிஞை).
22. மதிலினுள் சென்று போரிடுதல்.
23. மதிலினுடைய பெருமையைச் சொல்லவும் காலை நேரத்தில் முரசு ஒலிப்பவும் படையெடுத்த வீரர்கள் கோபித்தல்.
24. வேற்றுப்படையினர் வருதல்.
25. யானையைக் கைப்பற்றுதல்.
26. மதிலில் உழுது வரகு விதைத்தல்.
27. வாள் மங்கலம் கூறுதல்.

என்றவாறு இருபத்தியேழு நிலைகளில் நடைபெறுவதனை சுவாமிநாதம் (நூற்.134-136) பதிவு செய்கின்றது.

"அதிகுழிஞை மருதத்தின் புறன்அரண(ம்)முற் றுதலும்,
அரண்காப்பும், எனஇரண் ரர்ம் அவற்றுஅரண்முற் றுதலே,
முதல்,உழிஞை சூடல்குடை நாட்கோள்,வா ணாட்கோள்
முரசுழிஞை, மதில்கொளக்கோள் எழுந்தகொற்ற வுழிஞை
மதுகையொடு வேந்துறலின் அரண்எய்தும் என்றல்
நமன்கண்ணன் எனச்சொல்லுங் கந்தழி உழிஞைப்
புதுமைபுகழ் முற்றுழிஞை எவர்க்கும்பூ விருப்பாய்ப்
பகறல்,மதிற் புறத்துஇருத்தல் மதினிலைக் கோடச் சொலலே" (சு.நா.,நூ.134)

## நொச்சித் திணை

அரணைக் காத்து நிற்கும் திணை நொச்சித் திணை ஆகும். இது,

1. எயில் காக்கும் வீரர்கள் நொச்சிப்பூவைச் சூடுதல்.
2. முன்னே போரில் இறந்த வீரர்களின் வீரத்தின் சிறந்த போக்கைச் சொல்லுதல்.
3. காவற்காடு அழியாதபடி பூசல் செய்த மதிப்பினைக் கூறுதல்.
4. காவற்காட்டைக் காத்து நின்றோர் வெற்றியை மேம்படுத்திச் சொல்லுதல்.
5. பெரிய அரணிடத்துப் பாயும் குதிரையின் வீரத்தைக் கூறுதல்.
6. மதில் காக்கும் போரைப் பற்றிக் கூறுதல்.
7. மதில் தாக்கப்படுவதைச் சொல்லுதல்.
8. அழியும் மதிலைப் படையானது காத்தல்.
9. பகையரசன் மகளை வேண்ட அவன் தர மறுத்தல்.

என்னும் ஒன்பது துறைகளை உடையது.

"மங்கலமாய் மதிற்குமாரி மணத்தல்,எயில் கொண்டோன்
மதில்வேந்தன் மகட்கேட்கு மிகல்,திரைகொண்டு ஏகல்,
பொங்குமுற்றி னோற்போக்கி யிருத்தல்,வேற் றரசர்
பொருமதிலின் அடைதொகையோடு எண்ணான்காம்; அரண்காப்பு
இங்குநொஞ்சி சூடல்முன்போய் விளிந்தமறப் பாசி,
இகல்மிளையூர்ச் செருமினைகாத் தேயம்விறன் மேம்படுத்தல்

அங்குதிரை மறம்,எயிற்போர், எயிலின்மிசை அழித்தல்,

அழிபடைதாங் குதல்மகட்கோண் மறுத்தல் ஒன்பான் தானே" (சு.நா.,நூ.136)

## தும்பைத் திணை

நெய்தல் என்ற அகத்திணைக்குப் புறனாக அமைவது தும்பைத் திணையாகும். இது "தனது வலிமை பொருளாகக் கருதி வந்த அரசனை எதிர்த்துச் சென்று அவன் தலையை தீர்க்கும் சிறப்புடையது" ஆகும்.

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்

சென்றுதலையழிக்கும் சிறப்பிற்றென்ப" (தொல்.,நூ.1016)

ஆயின் சுவாமிநாதம் 'தும்பைத்திணை என்பது போருக்கு புறப்பட ஆயத்தமாவது' என்று இலக்கணம் இயம்புகின்றது. தொல்காப்பியம் தும்பைத் திணைக்கு,

1. தானைப்படை.
2. யானைப்படை.
3. குதிரைப்படை.
4. தன் அரசனைப் பகைவர் மொய்த்த காலத்து ஒரு வீரன் மட்டும் நின்று வென்ற முன்னணிப்படை.
5. அரசர் இருவர் போர் செய்யும்போது இருவரும் அழியும் தபதிப் பக்கம்.
6. ஒரு வீரன், தன் தலைவனை அவன் சிதறிய படையுட் புகுந்து பின்னணிப் படையைப் பாதுகாக்கும் எருமை மறம்.
7. மேல்வரும் பகைப்படைக் கலங்களை அழித்துப் பெருமிதம் கொள்ளும் பாதுகாவலன்.
8. எதிர் வரும் யானையை எதிர்த்து ஏறும் பெருமை
9. தேயம் அற்று இறந்த வேந்தனை, வென்ற வேந்தனின் வாள் மறவர் சூழ்ந்தாடும் ஆர்ப்பும்.
10. வாள்புண் பெற்று இருபெரு வேந்தரும் தாமும் சுற்றமும் முழுவதும் அழிந்த தொகைநிலை.
11. போர்க்களத்தில் தன் அரசன் வீழ்ந்ததற்காகச் சினந்து, ஒரு படைவீரன் அவனை வீழ்த்தியவரை அழிக்கும் விய பரிவும்.
12. பலவகைப் படையும் ஒருவனுக்கு உடைந்து கெட்டழிந்தவிடத்துப் பலரையும் கொன்று குவித்த நூழில் நிலை (தொல்.,நூ.1018)

என்ற 12 துறைகளை வகுக்கின்றது.

ஆயின் சுவாமிநாதம் தும்பைத் திணைக்கு 28 துறைகளை வகுக்கின்றது அவையாவன;

1. தும்பைப்பூவால் ஆன மாலையை அணிந்து கொள்ளுதல்.
2. தம் போர் வீரர்களுக்கு பரிசு அளித்தல்.
3. படையை பாதுகாத்த ஆற்றலைக் கூறும் தானை மறம் (படைவீரர்களின் வீரச் சிறப்பு).
4. அரசனுக்கு உறுதி கூறுதல்;
5. படையின் வீரத்தை உயர்த்திச் சொல்லி பகைவர் அழிவுக்கு இரங்குதல்.

6. குதிரையின் வீரத்தைச் சிறப்பித்துச் சொல்லுதல்.
7. யானையின் வீரத்தைச் சிறப்பித்துச் சொல்லுதல்.
8. தூசி நிலை.
9. தார்நிலை.
10. ஆசை மொய்த்த வழி ஒருவன் மேல் எறிதலாகிய தேயம் வலிமையை சிறப்பித்துச் சொல்லும் மறம்.
11. போரில் இறந்தோர்க்கு பாணர் இறுதிக் கடன் செய்தல்.
12. போர்க்களத்தில் இரண்டு அரசரும் இறந்த பின்னரும் முடியாத போரின் நிலை.
13. புற முதுகிட்ட தன்னுடைய படைக்குப் பின் நிற்கும் எருமை மறம்.
14. தம் வேலைக் கீழே போட்டு விட்டுத் தன்னுடைய உடம்பின் வலிமையால் பின்னரும் வெற்றி கொள்ளும் ஏம வெருமை.
15. தன் நெஞ்சில் இருந்த வேலைத் திரித்து ஆடும் நூழில்.
16. அந்த வேலைப் பறித்து எறியும் நூழிலாட்டு.
17. மன்னனுடைய தேர் முன் வீரர் ஆடும் முன்னர்க் குரவை.
18. தேர்ப்பின்னே பாணிச்சியர் முதலானோர் ஆடும் பின்னர்க் குரவை.
19. தேயம் முன்னும் பின்னும் பேய் ஆடுதல்.
20. வேல் படுதலால் வீழ்ந்த யானைக் கீழ்ப்படுதல்.
21. வாள் வீரர் அரசன் வாளோடு ஆடும் வாள்மாலை.
22. வீரர்கள் போர்க்களத்தைச் சிறப்பிக்கும் தானை நிலை.
23. வேலின் அம்பு மார்பைத் தீண்டிய போது உடன் நிலத்தைத் தீண்டாத அச்சம்.
24. இத்தகைய வீரர்களின் தேயங்களை மாதர் தழுவும் சிருங்கர நிலை.
25. வாளால் ஏற்பட்ட விழுப்புண் உடைய கணவனைக் கண்டு மனைவி மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தல்.
26. தன்னுடைய அரசன் இறந்தானாகில் வீரன் இறந்திடல்.
27. கணவனைக் காண மனைவி வருதல்.
28. இரண்டு அரசனுடைய சுற்றத்தார் அனைவரும் இறத்தல். (சு.நா.,நூற்.137-139)

என்பனவாகும்.

“தாங்கு நெய்தற் புறம்தும்பை சமர்க்குஎதிர்வாம்; தும்பை
தரித்தல்படைக்கு உதவுகொடை ஒலிபடையை ஓம்பி
ஓங்கல்புரி தானைமற(ம்), மன்னைலும் படுத்தல்
உறுபடையின் மறஞ்சொலிஎண் ணவர் அழிபுக்கு இரங்கல்
ஆங்,குதிரை மறம்ஆனை மறம்தூசி நிலைதார்
ஆசைமொய்த்த வழிஒருவன் எறிதல் மறமே
தூங்கல்எறிந்து இறந்தேயம்ர்க்குப் பாணர்கடன் கழித்தல்
துறைஇருவர் மாய்ந்தும்போர் அகலாப்போர் நிலைய” (சு.நா.,நூ.137)

## வாகைத் திணை

மக்கள் நடந்து செல்லவே பயந்து நடுங்கும் தன்மையுடைய பாலைத் திணைக்குப் புறனாக அமைவது வாகை என்ற புறத்திணையாகும். இதற்கு "வலியும் வருத்தமும் இன்றி, இயல்பாகிய ஒழுக்கத்தானே. தம்முடைய கூறுபாடுகளை இரு வகைப்பட மிகுதிப்படுத்தல்" என இலக்கணம் சுட்டுகிறது தொல்காப்பியம்.

"தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாடுபட மிகுதிபடுத்தல் என்ப" (தொல்.,நூ.1020)

வாகைக்கு தொல்காப்பியர் 18 துறைகளைச் சுட்டுகிறார். (தொல்.,நூ.1022)

சுவாமிநாதம் வாகை என்பதற்கு "பகை அரசனைக் கொன்று பகை ஒழித்து விடும் வெற்றி" என்கின்றது. இது வாகைத்திணைக்கு,

1. பகை அரசனைக் கொன்று ஒழித்துவிடும் வெற்றியே வாகை.
2. போர் முடித்து வாகைப்பூ சூடுதல்.
3. மாலையினையும் கச்சினையும் கழிலினையும் இனி அணிந்து கொள்வோம் என்று கூறுதல்.
4. சிறந்த அரசனது தன்மையினைக் கூறும் அரச வாகை.
5. முரசினுடைய தன்மையைக் கூறும் முரசுநிலை.
6. அரசனை உழவன் என்று சிறப்பித்துக் கூறும் மறக்கள வேள்வி.
7. போர்க்களத்தில் பேய்கள் கூடுதல்.
8. பார்ப்பாரது தன்மையைக் கூறும் பார்ப்பன வாகை.
9. வணிக வாகை.
10. வேளாளர் வாகை.
11. உன் புகழ் மிகுதியாக இருப்பதனால் பிறரை இகழாமல் இரு என்று கூறும் பொருந வாகை.
12. மூன்று கால நிகழ்ச்சியையும் அறிந்து சொல்லும் அறிஞரின் தன்மையைக் கூறும் அறிஞ வாகை.
13. தபோதன வேடத்தார் தன்மையைக் கூறும் தாபத வாகை.
14. கூதிர் காலத்துப் பிரிவாற்றமையால் வருந்தும் கூதிர்ப் பாசறை.
15. வாடைக் காற்றின் மிகுதியைக் கூறும் வாடைப் பாசறை.
16. அரசனுடைய தன்மையைக் கூறும் அரச முல்லை.
17. பார்ப்பான் முல்லை.
18. எட்டுவகை நெறியைப் பின்பற்றி நடுவு சொல்லும் சான்றோர்களின் தன்மையைக் கூறும் அவைய முல்லை.
19. சோதிடரால் வல்லவனது கீர்த்தியைக் கூறும் கணிவன் வாகை.
20. வீரத்தின் சிறப்பைச் சிறிய பேதையர்க்கு எடுத்துக் கூறும் மூதின் முல்லை.
21. இடத்தினையும் இயல்பினையும் சொல்லி அரசனை உயர்த்திக் கூறும் வல்லாண் முல்லை.
22. அரசன் பாதுகாத்தலைச் சிறப்பிக்கும் காவன் முல்லை.

23. அரசன் பாதுகாத்தலின் தகுதியைக் கூறல்.
24. அரசன் போர்களத்தைக் கொண்ட சிறப்பைக் கூறும் பேராண் முல்லை.
25. மன்னன் கொடுத்ததை விரும்பாத வீரனின் தன்மையைக் கூறும் மறமுல்லை.
26. குடையைப் புகழும் முல்லை.
27. போரில் அவிப்பலி (உயிர்ப்பலி) கொடுத்தல்.
28. சான்றோர்களின் பெருமையைக் கூறும் சால்பு முல்லை.
29. கிணையைக் கொட்டுவோரின் புகழைக் கூறுதல்.
30. தத்துவத்தின் பயன் உணர்ந்து மெய்ப்பொருள் அறிதல்.
31. உலகத் துயரத்தை உணர்ந்து அருள் காரணமாகப் பற்றை ஒழித்தல்.

(சு.நா.,நூற்.139- 141)

என 31 துறைகளைச் சுட்டுகின்றது.

“ . . . . . . . . . . . . . . . . பாலைக்கு
ஆள்புறமே வாகைபகை முடித்திடும்வெற் றியதாம்;
அமர்முடித்து வாகைசூடு தல்இகன்றோர் கண்ணி
தாள்கழல்கச்சு இனிப்புனைவோம் எனில்அரச வாகை;
முரசுநிலை, இறையுழவன் எனும் மறக்கள வழியே” (சு.நா.,நூ.1391)

## காஞ்சித்திணை

பெருந்திணைக்குப்புறமாக வருவது காஞ்சித் திணையாகும்.

“காஞ்சிதானே பெருந்திணைப் புறனே” (தொல்.,நூ.1023)

இதற்கு “துணை இல்லாத சிறப்பினையுடைய வீட்டின்பம் காரணமாக, பலவழிகளிலும்; நிலை பேறில்லாத உலக இயற்கையைப் பொருந்திய நல்நெறியினை உடையது” என தொல்காப்பியம் இலக்கணம் சுட்டுகின்றது.

“பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே” (தொல்.,நூ.1024)

ஆயின் சுவாமிநாதம் காஞ்சித் திணை என்பதற்கு, “நிலைபேறு இல்லாத உலகத்தைப் போற்றிப் பாதுகாப்பது” என இலக்கணம் சுட்டுகின்றது. காஞ்சித்திணைக்கு மொத்தம் 24 துறைகளை வகுத்துள்ளது. அவையாவன;

1. நிலைபேறு இல்லாத உலகத்தைப் போற்றிப் பாதுகாப்பது காஞ்சி.
2. பகையரசன் வந்துவிட அரசன் காஞ்சிப்பூவை அணிந்து கொள்ளுதல்.
3. எதிர்த்துப் போரிட விரைவாகச் செல்லுதல்.
4. எதிர்த்துவரும் பகையரசரைத் தடுத்து வரும் வழியைக் காத்தல்.
5. வீரர்களுக்குப் படைக்கலங்களை வழங்குதல்.
6. படைக்கலங்களையும் வரிசையையும் பெற்றுக் கொண்டோர் தங்களுடைய வலிமையைக் கூறல்.
7. பகைவர் அறைகூவி அழைத்தால் செல்க என்று கூறும் வாள் செலவு.
8. போர்க்குடையைப் புறவீடு விடுதல்.

9. இவ்வாறு செய்வேன் என்று சூளுரைத்தல்.
10. அரசன் கொடுத்த பூவின் சிறப்புச் சொல்லுதல்.
11. எதிர்த்து வரும் படையைத் தாங்கி இறந்தவனுடைய தலையின் மதிப்பைச் சொல்லுதல்.
12. தலையைக் கொண்டு வந்தவனுக்கு செல்வத்தைக் கொடுத்தல்.
13. கணவனுடைய தலையைக் கண்ட மனைவி தன் உயிரைப் போக்கிக் கொள்ளுதல்.
14. பகைவர் சாதலைப் போற்ற மறவர் வருதல்.
15. பகைவர் வேல்பட்ட தன்னுடைய மார்பில் புண்ணைப் பிளந்து கொண்டு இறத்தல்.
16. வீரனின் திறத்தைக் கண்டு பேய் பரிகாசித்தல்.
17. இறந்தாரைக் கண்டு பேய் அஞ்சுதல்.
18. பேய் புண்ணைத் தொடுதல்.
19. புண்ணினைத் தீண்டுவதற்குப் பயப்பட்டுப் பேய் நீங்கிய தொடாக் காஞ்சி (புண்பட்டு இறந்த வீரனின் உடலை பேய் நெருங்கா வண்ணம் மனைவி காப்பது எனத் தொல்காப்பியம் சுட்டுகின்றது). (தொல்., நூ. 1025)
20. வீரனின் ஆற்றல் இத்தன்மையது என்று புகழ்ந்து மனம் நொந்து இரக்கப்படுதல்.
21. மனைவி எரிமுழ்குதல்.
22. வீரன் இறந்துபட்ட வேலினால் அவன் மனைவியும் இறத்தல்.
23. மன்னன் பகை அரசன் முன்னே போர்க்களத்திலிருந்து போக்குதல் (சு.நா.,நூற்.142-143) என்பனவாகும்.

"பெருந்திணைக்குப் புறம்காஞ்சி, நில்லாத உலகம்
பேணுதலாம்; இறையதிர்ஊன் றிடக்காங்சி சூடல்
விரைந்து எதிர்த்தல் எதிர்த்தாரைத் தடுக்கும்வழித்தழிஞ்சி,
மீளியர்க்குப் படைவழங்கல், வரிசையேற் றார்த்தன்
முரண்புகறல், அறைகூவற் செல்கெனும்வாட் செலவு
முனைக்குடையிற் சேரல்சூழ் உரைத்தல்பூக் கூறல்
தருந்தூசி தாங்கிவீழ் தலைக்காஞ்சி, தலைதந்
தார்க்குதவல் பதிதலைகண் டவள்உயிர்மாய்த் திடலே" (சு.நா.,நூ.142)

## பாடாண் திணை

கைக்கிளைக்குப் புறமாக அமையும் திணை பாடாண் திணையாகும்.

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங்காலை நாலிரண்டு உடைத்தே" (தொல்.,நூ.1026)

பாடுவதற்குரிய அரசனைப் பாடும் சிறப்புப் பண்புகளை உடைய இத்திணை,

1. அரசனின் கொடைத் திறன், ஆற்றல் திறன் முதலியவற்றைச் சொல்லிப் புலவன் வாயிற் காவலனை அனுப்புதல்.
2. இறைவனொடு வேறொரு தக்கவரையும் தக்கபொருளையும் உவமையாகவும் உருவமாகவும் ஒப்பிட்டுக் கூறல்.

3. அரசன் முன்னால் தான் பெறக் கருதும் பரிசில் இவை என்று கூறுதல்.
4. இன்னார் இவை ஈந்தார், அவர்போல் நீயும் தருக என்று கூறுதல்.
5. அரசனைத் துயிலிலிருந்து எழுப்புதல்.
6. மடல் ஏறுதல்.
7. மங்கலம் பாடுதல்.
8. சபையில் மங்கலம் பாடுதல்.
9. அரசனுடைய விளக்கின் சிறப்பைக் கூறுதல்.
10. ஞாயிற்றின் பண்போடு உவமித்துச் சொல்லுதல்.
11. கபிலைப் பசுவின் முறைமையைக் கூறல்.
12. வேள்வி செய்த முறைமையைக் கூறுதல்.
13. வெள்ளியினது நிலைமையைக் கூறுதல்.
14. மழைக்குறி கூறுதல்.
15. இல்வாழ்க்கையின் சிறப்புக் கூறுதல்.
16. வேந்தன் அரசிருப்பு.
17. திருமண வாழ்க்கையின் சிறப்புச் சொல்லுதல்.
18. மகப்பேற்றின் சிறப்புச் சொல்லுதல்.
19. நாட்டின் வளம் சொல்லுதல்.
20. நகரின் வளம் சொல்லுதல்.
21. மலையின் வளம் சொல்லுதல்.
22. ஆற்றின் வளம் சொல்லுதல்.
23. தாரின் சிறப்புச் சொல்லுதல்.
24. கொடியின் சிறப்புச் சொல்லுதல்.
25. நாட்சிறப்பு சொல்லுதல்.
26. கிணைக்கொட்டுவோரின் நிலையைக் கூறுதல்.
27. பாணர்க்குப் பரிசு கொடுத்தல்.
28. போர்க்களத்தின் சிறப்புக் கூறுதல்.
29. ஆடும் வெறி.
30. ஆயுதத்தின் நன்மையைக் கூறுதல்.
31. கடவுளை வணங்குதல்.
32. கடவுளை வணங்கி பெறும் பயனைக் கூறல்.
33. கூத்தர் ஆற்றுப்படை.
34. விறலியர் ஆற்றுப்படை.
35. பொருநர் ஆற்றுப்படை.
36. புலவர் ஆற்றுப்படை.
37. பாணர் ஆற்றுப்படை.
38. அரசன் நல்லனவற்றை அறிந்து கொள்ளக் கூறுதல்.
39. அரசவையில் பரிசில் பெற்றும் விடை பெற்றுச் சொல்லாது தங்கியிருத்தல்.

40. விடை பெற்றுச் செல்லுதல்.
41. கடவுளைப் பெண்கள் விரும்பிக் கெஞ்சிக்கேட்டல்.
42. அவன் அணிந்த மாலையை விரும்புதல்.
43. அவனைத் தழுவமாட்டோம் என்று கூறுதல்.
44. வேண்டா வெறுப்பு.
45. அரசனுடைய விருப்பத்தை உரைத்தல்.
46. புறநிலை.
47. வாயுறை வாழ்த்து.
48. அரசன் செய்ய வேண்டிய நல்ல செயல்களை எடுத்துச் சொல்லுதல். (சு.நா.,நூற்.144-146)

என 48 துறைகளை உடையது.

கைக்கிணைக்குப் புறம்பா டாண் டிணைபாடிற் குரிய
காவலனைப் பாடொழுக்கம் பாடுநெறித் தாகு(ம்)
மெய்க்கொடைசீர், ஆற்றல், அளி சொல்லிறைக்கு வாயில்
விடும்புலவன் கடைநிலைஈ சனைப்பிறரைப் பிறிதைத்
தக்கொருவ னோடுஒன்றோடு உவமஉரு பகமாச்
சாற்றல்இறை முன்எண்ணும் பரிசில்இவை என்றல்
தொக்கின்னர் இவைஈய்ந்தார் அவர்போல்ஈ கென்றல்
துயில்எழுப்பல், மடலேறல், மங்கலம்பா டுதலே" (சு.நா.,நூ.144)

## அறுவகையிலக்கணம்

அறுவகையிலக்கணம் முன்னைய இலக்கண நூற்களிலிருந்து முழுவதுமாக மாறுபட்டு புறப்பொருள்கள் எவை என்பதனை எடுத்துரைக்கின்றது. அவையாவன;

1. சூரியன், சந்திரன், விண்மீன்கள், மேகம் ஆகியன காணப்படும் ஆகாயம்
2. யானைகளும் நாகங்களும் வாழும் கீழேழ் உலகம் (அதல, விதல, சுதல, தராதல, ரசாதல, மகாதல, பாதாலம் ஆகியன கீழேழ் உலகம்)

   தமிழ் அல்லாத வேற்றுமொழிகள் வழங்குகின்ற நாடுகள், எட்டு திக்குப் பாலகர்களின் (இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்) நகரங்கள் போன்றவற்றைப் புறப்பொருளாகச் சுட்டுகின்றார்.

"கதிர்மதி, உடு, முகில் ஆதிய கவின்தரும்
வானத்து உரைசெயும் வகைஎலாம் புறமே" (அ.இ.,பொ.நூ.105)
"பாழியந் தடக்கைப் பகட்டுஇனம் பாம்பினம்
அமர்தரும் அதலம் ஆதியும் புறமே" (அ.இ.,பொ.நூ.106)

## முடிவுரை

நெல்லை மாவட்ட இலக்கண நூற்கள் மரபிலக்கண நூற்களைப் பின்பற்றி பொருள் இலக்கணம் வகுக்கின்றன. ஆயின் பொருளினை அகம், புறம், அகப்புறம் எனப்பிரித்துப்

பேசுகின்றன. இவை முதற் பொருளினை மரபிலக்கண நூற்களை பின்பற்றியே இலக்கணம் வபுத்துள்ளன. ஆயின் அறுவகையிலக்கணம் மட்டும் நிலத்தியல்பு, உழியியல்பு எனச் சுட்டுவதும் நோக்கத்தக்கது. சுவாமிநாதம் தனக்கு முன்பிருந்த இலக்கணிகளைப் பின்பற்றி புறத்திற்கு இலக்கணம் வகுத்திருப்பதும், அறுவகையிலக்கணம் ஆகாயம், நகரம் போன்றனவற்றை உலக நடப்பினையொட்டி புறமாகச்சுட்டுவதும் நோக்கத்தக்கதாகும்.

## References

Subramaniyan. S.V., (2006) Tolkappiyam – Manivasagar Pathipagam, Chennai, India.

Subramaniyan. S.V., (2007) Tamil Grammar Books, Meyyapan Pathipagam, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License